1981 மே 13]

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னையில் இயங்கிவரும் நகர் ஊரமைப்புத்துறை செங்கற்பட்டு மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தை அடுத்த கல்வியாண்டு துவங்குவதற்குமுன் காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநர் உடனே காஞ்சிபுரத்தில் தகுந்த கட்டிடம் தெரிந்தெடுத்து அலுவலகத்தை அரசு முடிவுப்படி காஞ்சிபுரத்திற்கு மாற்றும்படி கேட்கப்பட்டுள்ளார்.

தர்மபுரியில் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம்,

*வினா எண் 1084 திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் பெண்கள் அரசுக் கலைக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே தொடங்கப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு, எஸ் அரங்கநாதன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் கல்லூரி இருக்கின்றது. ஆனால் தர்மபுரி மாவட்டத்திலே அந்த நிலை இல்லை. அந்த மக்கள் மட்டும் ஏன் அதைப் பெற முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே அருமை அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் அதைச் செய்வதற்கு வழிவகை செய்து தருவார்களா? இதற்கு முன் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பூர்ணலிங்கம் அவர்களும் அது பற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. அசோக்குமார் அவர்களும் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லை என்று தெரிவித்துவிட்டார்கள். ஆகவே இதற்கு ஆவன செய்வார்களா?

மாணபுமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, புதிதாகக் கலைக் கல்லூரிகளைத் துவங்குவது இல்லை என்ற ஒரு முடிவிலே அரசு இருக்கின்றது. அதுபற்றி பரிசீலிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. அப்படிப் புதிதாக கலைக் கல்லூரி ஆரம்பிக்கின்ற நிலைமை வருகின்றபோது அந்தந்தப் பகுதிகளை அனுசரித்து, பொதுமக்களின் ஆர்வத்தையும் அடிப்படையாக வைத்து புதிய கல்லூரிகளைத் துவங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பி. எஸ். துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது அரசுக்குத் தெரிந்த விஷயம். ஆகவே இப்போது இல்லை என்று தெரிவித்தாலும் பெண்களுக்கு அங்கே கல்லூரி அவசியம் என்பதைப் பற்றி பரிசீலனை செய்யுமா அரசு என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரி என்று கேட்டதனால் நான் இல்லை என்று சொல்லி இருக்கிறேன். வேறு இடத்தைக் குறிப்பிட்டுக் கேட்டால் கூட இல்லை என்ற பதிலைத் தான் நான் சொல்லி இருப்பேன். அதற்குக் காரணம் மூன்று ஆண்டு காலத்திற்கு கல்லூரிகளை எங்கேயும் துவங்குவதில்லை என்ற முடிவிலே இருக்கிறோம். ஆனால் அதை மாற்றி புதிதாகக் கல்லூரிகளை ஆரம்பிக்கலாமா என்ற யோசனை இப்போது இருக்கின்றது. ஆகவே அப்படி முடிவு எடுத்ததற்குப் பிறகு பார்க்கலாம்.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிதாகக் கல்லூரிகள் எதுவும் துவக்குவதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே இரண்டு ஆண்கள் கலைக் கல்லூரிகள்தான் இருந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே பெண்கள் வெளி இடங்களுக்குச் சென்றுதான் படிக்க வேண்டிய நிலைமை இருப்பதால் இதுபற்றி ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் அங்கே பெண்கள் கலைக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சியினை எடுப்பார்களா

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற கலைக் கல்லூரிகளின் மூலமாகவே போதுமான அளவுக்கு கல்வியினைத் தரமுடியும் என்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். புதிதாகத் துவங்குவது என்பதைப் பொறுத்தவரையிலே பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் அடிப்படைக் கல்வியினையே முழுமையாகத் தர முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்ற போது கல்லூரிக் கல்விக்குப் போய் பணத் தச்செலவு செய்து கொண்டிருக்க வேண்டுமா என்று மத்திய அரசு இந்த 5, 6 ஆண்டுக் காலமாக கல்லூரிகள் புதிதாக ஆரம்பிப்பதைத் தடுத்து வருகின்றது. வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றது. ஆகவே நாம் அதுபற்றிப் பரிசீலனை செய்கின்றபோது சிறப்பான நிலைமைகளை அனுசரித்துதான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS